# EEDISSIA

**Erode District Small Industries Association**
**ஈரோடு மாவட்ட சிறுதொழில்கள் சங்கம்**

EEDISSIA Reg.No.32/80



5/1, SIDCO Industrial Estate, Chennimalai Road, Erode - 638 001. Tamilnadu.
Ph: 0424 - 2274307 Cell : 9787820202 E-mail : eedissia@gmail.com



**GOVERNING BOARD**


**Mr. P. KANDASAMY,** President


**Mr. V.T. SHREEDHAR,**
Immd. Past President


**Mr. R. RAM PRAKASH,** Vice President


**Mr. P. SURESH,** Vice President


**Mr. A. SARAVANABABU,** Secretary


**Mr. M.K.K. BARATH,** Treasurer


**Mr. S. SAKTHIVEL,** Jt. Secretary


**Mr. S. KARTHIKEYAN,** Jt. Secratrary


**Mr. M.S. SHARATH MANO,** Jt. Treasurer


## உள்ளே...


| | | |
|---|---|---|
| 01 | தலைவர் செய்திகள், பொறுப்பாசிரியர் செய்திகள் | 06 |
| 02 | செயலாளர் செய்திகள் | 09 |
| 03 | தொழில்துறைகளில் ஆற்றல் சேமிப்பு மற்றும் செலவு குறைப்பு | 15 |
| 04 | தொழில்துறையில் பாதுகாப்பு – மேலாண்மையின் முக்கிய பொறுப்பு | 19 |
| 05 | தொழில்துறையில் திறன் மேம்பாடு – தொழிலாளர்களின் வலுவான Workforce உருவாக்கம் | 23 |
| 06 | சிறுதொழில் ஏற்றுமதியை ஊக்குவிக்க தமிழக அரசு நிறுவனம் ஒப்பந்தம் | 25 |
| 07 | அரிசியை விட 8 மடங்கு இரும்பு.! | 26 |
| 08 | வெற்றிகரமான தலைமைத்துவத்திற்கான ஒரு வழிகாட்டி | 28 |
| 09 | MSME உரிமையாளர்களுக்கான ஒரு வழிகாட்டி | 40 |
| 10 | **Game Board -** மகேந்திரசிங் தோனி | 42 |
| 11 | வடிவேலு மேலாண்மை | 46 |
| 12 | 'ஹியூமன் இன்ஜினியரிங்' (Human Engineering) | 51 |
| 13 | தொழில்துறைகளில் தர மேலாண்மை அமைப்பின் முக்கியத்துவம் | 55 |
| 14 | வணிகங்களுக்கான 50 செயல் குறிப்புகள் | 59 |



**EDITORIAL BOARD**

**PUBLISHER**
**S.K. RAJESHWARAN**
Past President

**EDITOR**
**S. RAMAMOORTHY**
R.G.S. Feeds

**EDITOR IN CHARGE**
**S. SAKTHIVEL**
Prasanab Syndicate

**ADVISORS**
**G. SUNDARAM**
Past President
**R. MAYILSAMY**
Past President
**R. BALASUBRAMANIAM**
Past President

**DESIGNED & PRINTED**
**Galaxy Publication**
**Erode, Mob: 96552 05068**

**EDITORS TEAM**
**P. KANDASAMY**
National Plastics
**A. SARAVANABABU**
S.B.B. Stainless Steel Fabrication
**M.K.K. BARATH**
Tower Solar Energies

The Editor intended not to us any copyrighted material for the publication or, if not possible, to indicate the copyright of the respective object. The materials are provided by EEDISSIA Bulletin as a service to its readers on an "as is" basis and may be used for information purposes only. EEDISSIA assumes to responsibility for error or omission in these materials. EEDISSIA makes no, and expressly disclaims any, representation or warranties, express or implied, regarding the EEDISSIA Bulletin, including without limitation the accuracy, completeness, or reliability of text, graphics, and other items published. No advice or information give by EEDISSIA Bulletin or any other party on this bulletin create any warranty or liability. Under no circumstances shall EEDISSIA or any of its Office Bearers, Executive Committee Members, Employees be held liable for any other damages, whether direct incidental, indirect special consequential damages, and including, without limitation, lost revenues or lost profits arising from or in connection with the use, reliance, or performance of the information in this bulletin.



# தலைவர் செய்திகள்

**அன்பார்ந்த ஈடிசியா உறுப்பினர்களுக்கு... வணக்கம்...**

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள். 2026 – புதிய ஆண்டில், ஈடிசியா குடும்பத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் ஆரோக்கியம், வளம், தொழில் வளர்ச்சி மற்றும் மனநிறைவு நிறைந்த ஆண்டாகவும், புதிய வாய்ப்புகள், புதிய சாதனைகள் மற்றும் புதிய உயரங்களை எட்டும் ஆண்டாகவும் அமைய மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

2025 டிசம்பர் மாதம், ஈடிசியா சங்கத்தின் செயல்பாடுகள் மிகச் சுறுசுறுப்பாகவும், தொழில் வளர்ச்சியை மையமாகக் கொண்டதாகவும் அமைந்தது. மாவட்ட தொழில் மையம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் நடைபெற்ற அரசுத் திட்டங்களின் செயல்பாட்டுக்குழு கூட்டங்களில் ஈடிசியா தொடர்ந்து சிறப்பாக பங்குகொள்கிறது.

TANSTIA தேர்தலில் வெற்றி பெற்று துணைத் தலைவராக பொறுப்பேற்ற முன்னாள் தலைவர் திரு. R.சுப்பிரமணியன் அவர்களுக்கு வழங்கப்பட்ட கௌரவிப்பு, ஈடிசியா சங்கத்தின் பெருமையை மேலும் உயர்த்தியுள்ளது. ஈரோடு – சேலம் ரயில்வே DRUCC உறுப்பினராக உள்ள நமது ஈடிசியாவின் கோரிக்கைக்கு இணங்க சென்னை To ஈரோடு ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயிலின் புறப்படும் நேரம் இரவு 9:00 மணிக்கு பதிலாக 9:45 மணிக்கு மாற்றப்பட்டுள்ளது. இது தொழில்துறைக்கான ஈடிசியாவின் சிறப்பான பங்களிப்பு ஆகும்.

2025–ம் ஆண்டில் ஈடிசியாவின் அனைத்து செயல்பாடுகளிலும் உறுதுணையாக இருந்த நிர்வாகக் குழு, செயற்குழு உறுப்பினர்கள், முன்னாள் தலைவர்கள் மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

நமது இந்திய நாட்டின் 76 வது குடியரசுதின நாளை ஜனவரி மாதம் 26 ஆம் நாள் கொண்டாடுகிற நாம் நம் தேச விடுலை வீரர்களையும் அவர்களின் தியாகங்களையும் நன்றியோடு நினைவு கூறுவோம்.

தமிழர் திருநாளாம் தை திருநாளில் உங்கள் குடும்பங்களில் இன்பமும், செல்வமும் பொங்க ஈடிசியா உறுப்பினர்கள் அனைவருக்கும் இதயம் நிறைந்த பொங்கல் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடனும், வாழ்த்துக்களுடனும்...

திரு. **P. கந்தசாமி**, தலைவர், ஈடிசியா

# பொறுப்பாசிரியர் செய்திகள்



அன்பார்ந்த ஈடிசியா வாசகர்களுக்கு...

எண்ணங்களில் தெளிவு, செயல்களில் நம்பிக்கை, வாழ்க்கையில் நிறைவு தரும் ஆண்டாக 2026 ஆம் ஆண்டு அமைய அனைவருக்கும் மனம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டைப் போலவே இந்த புத்தாண்டிலும் உங்கள் ஆதரவும், அன்பும் தொடர விரும்புகின்றேன். இந்த மாத இதழிலும் வாசகர்கள் அனைவருக்கும் பயனுள்ள கட்டுரைகள், மனம் கவரும் தலைப்புகளில் நீங்கள் விரும்பும் வகையில் தொகுத்து அளித்திருக்கிறோம். வணிக மேலாண்மை, தொழில்நுட்பம் போன்ற பகுதிகளும், Game Board தொடரில் விளையாட்டு வீரர்களின் வாழ்க்கை குறிப்பு, மற்றும் பிரபலமானவர்களின் வாழ்க்கை குறிப்பு ஆகியவற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடங்களையும் வித்தியாசமாக விவரிக்கிறது. சிறுதானியங்களின் முக்கியத்துவத்திற்கும் ஒரு பக்கம் உள்ளது. அனைவரும் தவறாமல் படியுங்கள். உங்கள் கருத்துக்களை எங்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.

சகோதரத்துவமும், சமத்துவமும் நிறைந்த இனிய குடியரசுதின நல்வாழ்த்துக்களையும், மகிழ்ச்சியும், செழிப்பும் பொங்கும் பொங்கல் திருநாள் வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்

என்றென்றும் அன்புடன்,

திரு. **S. சக்திவேல்**, பொறுப்பாசிரியர், ஈடிசியா.



# செயலாளர் செய்திகள்

**ஜனவரி 2026**

**ஈடிசியா உறுப்பினர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். புதிய ஆண்டின் ஒவ்வொரு நாளும் உங்களுக்கு வெற்றி, மகிழ்ச்சி, சந்தோஷம் மற்றும் செல்வம் ஆகியவை பெருகட்டும் என ஈடிசியாவின் சார்பாக வாழ்த்துகிறேன்.**

**இந்த இதழிலும் நமது ஈடிசியாவின் கடந்த மாத நடவடிக்கைகளை சுருக்கமாக உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்களின் அன்பும் ஆதரவும் இப்பணியை தொடர்ந்து செய்ய எங்களுக்கு மிகுந்த ஊக்கமும், உற்சாகமும் தருகிறது. தொடர்ந்து உங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எங்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். நன்றி.**

– திரு. **A. சரவணபாபு**, செயலாளர், ஈடிசியா

## 01.12.2025

திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு ஈடிசியாவின் நிர்வாகக்குழு கூட்டம் நமது ஈடிசியா அலுவலகத்தில் உடனடி முன்னாள் தலைவர் திரு.V.T. ஸ்ரீதர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு.சரவணபாபு (செயலாளர்), திரு.பரத் (பொருளாளர்) மற்றும் ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



## 08.12.2025

திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு மாவட்ட தொழில் மையத்தில் தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (TWEES) செயல்பாட்டுக்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் DIC பொதுமேலாளர் திரு.திருமுருகன், வங்கி நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகளுடன் நமது ஈடிசியாவின் தலைவர் திரு.P.கந்தசாமி அவர்கள் கலந்து கொண்டு பயனாளிகளைத் தேர்வுசெய்தார்.



## 11.12.2025

வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மாவட்ட தொழில் மையத்தில் தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (TWEES) செயல்பாட்டுக்குழு கூட்டம் நடைபெற்றது. DIC பொதுமேலாளர் திரு.திருமுருகன், வங்கி நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகளுடன் நமது ஈடிசியாவின் தலைவர் திரு.P.கந்தசாமி அவர்கள் கலந்து கொண்டு பயனாளிகளைத் தேர்வு செய்தனர்.

## 15.12.2025




திங்கட்கிழமை மதியம் 2.00 மணிக்கு நமது ஈரோடு மாநகரில் ஈடிசியா சார்பாக ஈரோ இன்டெக் தொழிற்கண்காட்சி நடத்துவதற்கான முதலாவது சிறப்பு கலந்தாய்வுக் கூட்டம் ஈடிசியா அலுவலகத்தில் தலைவர் திரு.கந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஈடிசியாவின் முன்னாள் தலைவர்கள், மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை பகிர்ந்துகொண்டனர்.

## 15.12.2025




திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு நமது ஈடிசியா அலுவலகத்தில் 6ஆவது செயற்குழு கூட்டம் நமது ஈடிசியாவின் தலைவர் திரு.P.கந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. TANSTIA தேர்தலில் வெற்றிபெற்று, டான்ஸ்டியாவின் துணைத் தலைவராக பொறுப்பேற்றுக்கொண்ட ஈடிசியாவின் முன்னாள் தலைவர் திரு.R.சுப்பிரமணியன் அவர்கள் இக்கூட்டத்தில் ஈடிசியாவின் சார்பில் கௌரவிக்கப்பட்டார். மேலும் சிறப்பு விருந்தினர்கள் திரு.மகேஷ், P.V. கிரி, (BNI Executive Director), திரு. ராஜீஷ், (Sr. Manager, MCX) ஆகியோர் தொழில் மற்றும் நிறுவனத்தை நிர்வகிக்கும் முறைகள், வளர்ச்சிக்கான வழிமுறைகள் பற்றி சிறப்புரையாற்றினார்கள்.

## 17.12.2025



புதன்கிழமை காலை 10.00 மணிக்கு மாவட்ட தொழில் மையத்தில் தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (TWEES) செயல்பாட்டுக்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நமது தலைவர் திரு.P.கந்தசாமி அவர்கள் கலந்து கொண்டு கடன்தொகைக்காக விண்ணப்பித்த பயனாளிகளைத் தேர்வுசெய்தார்.

## 18.12.2025



வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் படித்து வேலையில்லாத பட்டதாரிகளுக்கு கடனுதவி வழங்கும் திட்டமான NEEDS, மற்றும் SC/ST பயனாளிகளுக்காக AABCS திட்டம் ஆகியவற்றில் கடனுதவிக்காக விண்ணப்பத்திருந்த பயனாளிகளைத் தேர்வு செய்யும் செயல்பாட்டுக் குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஈரோடு மாவட்ட ஆட்சியர், வங்கி நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் இவர்களுடன் ஈடிசியாவின் தலைவர் திரு. P. கந்தசாமி அவர்கள் கலந்து கொண்டார்.

## 24.12.2025

புதன்கிழமை காலை 10.00 மணிக்கு சிறந்த ஈரோட்டை உருவாக்கும் திட்டத்தின்கீழ் ஈரோடு மாவட்ட சமூகப் பொறுப்புணர்வு மற்றும் பெருநிறுவனங்களின் மேம்பாட்டிற்கான (Corporate Social Responsibility (CSR) & Community Engagement & Revenue (CER) - Conclave 2025) சிறப்பு மாநாடு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர், திட்ட அலுவலர், DIC- யின் பொதுமேலாளர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்ட இம்மாநாட்டில் ஈரோடு மாவட்ட தொழில்துறை சார்பாக நமது ஈடிசியா தலைவர் திரு.P.கந்தசாமி, முன்னாள் தலைவர் திரு.P.திருமூர்த்தி, திரு.A.சரவணபாபு (செயலாளர்), திரு.M.K.K.பரத் (பொருளாளர்), திரு.S.சக்திவேல் (இணைச் செயலாளர்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 24.12.2025



புதன்கிழமை காலை 10.00 மணிக்கு மாவட்ட தொழில் மையத்தில் தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (TWEES) செயல்பாட்டுக் குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத் தொழில்மையத்தின் A.E. திரு.ஜெகன் மற்றும் அதிகாரிகளுடன் நமது ஈடிசியாவின் தலைவர் திரு. P. கந்தசாமி மற்றும் ஈடிசியாவின் பொதுமேலாளர் திரு. கிளமெண்ட் ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளைத் தேர்வு செய்தனர்.

## 26.12.2025



வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொங்கு இன்ஜினியரிங் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அக்கல்லூரியின் Seeds Fund Management Committee கூட்டத்தில் அக்கமிட்டி அங்கத்தினர்கள், கல்லூரி நிர்வாகிகளுடன் ஈடிசியா சார்பாக தலைவர் திரு.P.கந்தசாமி, முன்னாள் தலைவர் திரு.P.திருமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## 27.12.2025

திங்கட்கிழமை ஈரோட்டில் ஈரோடு திருப்பூர் தென்னை சார் பொருட்கள் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஈரோடு மாவட்ட தொழில்மையத்தின் பொதுமேலாளர் திரு.திருமுருகன், சங்கத்தின் தலைவர் திரு.தனசேகரன், காயர் பெடரேஷன் தலைவர் திரு.பூச்சாமி ஆகியோருடன் ஈடிசியா சார்பாக ஈடிசியாவின் முன்னாள் தலைவரும், டான்ஸ்டியாவின் துணைத் தலைவருமான திரு.R.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.



**ஈடிசியா உறுப்பினர்கள் அனைவருக்கும்**
**இனிய பொங்கல் திருநாள் மற்றும்**
**நமது சுதந்திர இந்தியாவின் குடியரசு தின நல்வாழ்த்துக்கள்.**
**புதிய ஆண்டில் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ்வாங்கு வாழ ஈடிசியாவின் செயலாளர் என்ற முறையில் இனிய நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.**

என்றென்றும் அன்புடன்,
- திரு. S. **சரவணபாபு**, செயலாளர், ஈடிசியா.

## ஈடிசியா உறுப்பினர்களின் முக்கிய கவனத்திற்கு

சமீபத்திய சொசைட்டி சட்டத்தின் படி அனைத்து சங்கங்களும் அதன் உறுப்பினர்களின் ஆதார் விவரங்களை பதிவாளர் அலுவலகத்தில் தவறாமல் சமர்ப்பிக்க வேண்டும். இப்போது அதுகட்டாயமாக்கப்பட்டுள்ளது.

உங்கள் ஆதார், பான், GST, UDYAM நகல்களை eedissia@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது 9787820202 என்ற எண்ணிற்கு Whatsapp மூலமாகவோ உடனடியாக அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன் நிறுவனத்தின் பெயர், முகவரி மற்றும் அலைபேசி எண் ஆகியவற்றையும் அனுப்பவும். இதில் உங்கள் ஒத்துழைப்பை தவறாமல் எதிர்பார்க்கிறோம்.

ஏற்கனவே அனுப்பியவர்கள் இந்த நினைவூட்டலை தவிர்க்கவும்.

# தொழில்துறைகளில் ஆற்றல் சேமிப்பு மற்றும் செலவு குறைப்பு
## (ENERGY CONVERSATION AND REDUCTION INDUSTRIES)



### அறிமுகம்

இன்றைய தொழில்துறை சூழலில் ஆற்றல் என்பது முக்கியமான உற்பத்தி வளமாகும். மின்சாரம், எரிபொருள் மற்றும் பிற ஆற்றல் ஆதாரங்களின் செலவுகள் தொடர்ந்து உயர்ந்து வருவதால், தொழில்கள் தங்களின் செயல்பாட்டு செலவுகளை கட்டுப்படுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இந்நிலையில், ஆற்றல் சேமிப்பு என்பது செலவு குறைப்பிற்கான ஒரு முக்கியமான மற்றும் பயனுள்ள உத்தியாக மாறியுள்ளது. குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (MSME)–களுக்கு, இது லாபத்தன்மையை உயர்த்தும் ஒரு வலுவான கருவியாக செயல்படுகிறது.

### ஆற்றல் சேமிப்பு – ஒரு புரிதல்

ஆற்றல் சேமிப்பு என்பது உற்பத்தி அளவையோ தரத்தையோ பாதிக்காமல், ஆற்றல் பயன்பாட்டில் உள்ள வீணாக்கம் மற்றும் இழப்புகளை குறைப்பது ஆகும். இது உற்பத்தியை குறைப்பதை அல்ல; ஆற்றலை திறமையாக பயன்படுத்துவதை குறிக்கிறது. மின்சாரம், எரிபொருள், கம்பிரஸ்டு ஏர் மற்றும் வெப்ப ஆற்றல் போன்ற பயன்பாடுகளில் உள்ள குறைபாடுகளை கண்டறிந்து சரி செய்வதே இதன் நோக்கமாகும்.




### தொழில்களில் முக்கிய ஆற்றல் பயன்பாட்டு பகுதிகள்

பெரும்பாலான தொழிற்சாலைகளில் ஆற்றல் அதிகமாக பயன்படுத்தப்படும் பகுதிகள்:

- மின்மோட்டார்கள் மற்றும் உற்பத்தி இயந்திரங்கள்
- கம்பிரஸ்டு ஏர் அமைப்புகள்
- கொதிகலன்கள் மற்றும் உலைகள்
- விளக்கு மற்றும் மின் பயன்பாட்டு அமைப்புகள்
- குளிர்பதன மற்றும் காற்றோட்ட அமைப்புகள்


இந்த பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சிறிய மேம்பாடுகளே கூட பெரிய சேமிப்பை உருவாக்கும்.

## ஆற்றல் சேமிப்பு நடவடிக்கைகள்

ஆற்றல் திறன் கொண்ட மின்மோட்டார்கள், LED விளக்குகள், VFD போன்ற தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல் மின்சார பயன்பாட்டை குறைக்கிறது. வழக்கமான பராமரிப்பு மூலம் கசிவுகள், அதிக வெப்பம் மற்றும் மின் இழப்புகளை கட்டுப்படுத்த முடியும். தேவையில்லாமல் இயங்கும் இயந்திரங்களை தவிர்த்தல், சரியான சுமை மேலாண்மை மற்றும் உற்பத்தி திட்டமிடல் போன்ற செயல்முறை கட்டுப்பாடுகள் ஆற்றல் சேமிப்பிற்கு பெரிதும் உதவுகின்றன. உலைகள் மற்றும் கொதிகலன்களில் இருந்து வெளிவரும் வெப்பத்தை மீண்டும் பயன்படுத்துவதன் மூலம் மொத்த ஆற்றல் திறன் அதிகரிக்கிறது.

## ஆற்றல் தணிக்கை மற்றும் பணியாளர் பங்கேற்பு

ஆற்றல் தணிக்கை மூலம் ஆற்றல் பயன்பாட்டில் உள்ள வீணாக்கங்கள் கண்டறியப்பட்டு, செலவுத் திறன் கொண்ட தீர்வுகள் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றன. அதே நேரத்தில், பணியாளர்களின் விழிப்புணர்வு மற்றும் பங்கேற்பு ஆற்றல் சேமிப்பின் வெற்றிக்கு மிக முக்கியமானது. எளிய பழக்கவழக்கங்களே கூட கணிசமான செலவு குறைப்பை ஏற்படுத்தும்.





## முடிவுரை

ஆற்றல் சேமிப்பு என்பது செலவு குறைப்பிற்கான ஒரு நடைமுறை மட்டுமல்ல; அது தொழில்களின் நிலைத்த வளர்ச்சிக்கான அவசியமான மேலாண்மை உத்தியாகும். சரியான தொழில்நுட்பம், ஒழுங்கமைக்கப்பட்ட செயல்முறை மற்றும் பணியாளர் பங்கேற்பு மூலம் தொழில்கள் தங்களின் செலவுகளை குறைத்து, போட்டித் திறனை உயர்த்த முடியும்.

---

# கொஞ்சம் சிரிச்சிட்டு போங்க!!!

முதலாளி வேலைக்காரனிடம் ஒரு கண்ணாடி வாங்கிவர சொன்னார்.
’கண்ல போடுற கண்ணாடியா..’னு கேட்டதும் முதலாளி கோபத்தில்...
’யோவ்... ஷேவ் பண்றதுக்குய்யா... என் முகம் தெரியுறமாதிரி ஒண்ணு வாங்கிவா...’ என்று அனுப்பிவைத்தார்.
வேலைக்காரன் திரும்பிவரவேயில்லை. நீண்டநேரத்திற்கு பின் மூச்சுவாங்க வெறுங்கையோடு வந்த வேலைக்காரனிடம் ஏன் கண்ணாடி வாங்கலன்னு கேட்டார் முதலாளி,
’பஜார் முழுக்க அலைஞ்சேன் முதலாளி.. ஆனாலும் நீங்க கேட்டமாதிரி கண்ணாடி கிடைக்கல. அதுதான் வாங்கல‘
ஏன்.. பெருசாவா இருந்துது..?’
’இல்ல... சின்னதாத்தான் இருந்துது..’
’பிறகு ஏன் வாங்கல..?’
’ எல்லா கண்ணாடியிலும் என் முகம்தான் தெரிஞ்சுது. அதுதான் வாங்கல...’





# தொழில்துறையில் பாதுகாப்பு – மேலாண்மையின் முக்கிய பொறுப்பு
## (INDUSTRIAL SAFETY - A KEY RESPONSIBILITY OF MANAGEMENT)

**அறிமுகம்**




தொழில்துறையில் பாதுகாப்பு என்பது மனித வாழ்வு, நிறுவன சொத்துகள் மற்றும் நிறுவன நம்பகத்தன்மையை பாதுகாக்கும் முக்கிய அம்சமாகும். விபத்துகள் ஏற்படும்போது பொருளாதார இழப்புகள், சட்டப் பொறுப்புகள், இயந்திர சேதங்கள் மற்றும் உற்பத்தி தடைகள் ஏற்படுகின்றன. ஆகையால் பாதுகாப்பு மேலாண்மை என்பது மேலாண்மையின் முக்கிய பொறுப்பாகும்.

**பாதுகாப்பின் முக்கியத்துவம்**

- பாதுகாப்பு பல்வேறு காரணங்களுக்காக அவசியம்:
- மனித வாழ்வு – பணியாளர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.
- சொத்து பாதுகாப்பு – இயந்திரங்கள், உபகரணங்கள் சேதமடையாமல் இருக்க வேண்டும்.
- செயல்பாட்டு தொடர்ச்சி – விபத்துகள் உற்பத்தியை இடையூறுக்கு உட்படுத்தாது.
- சட்ட பின்பற்றுதல் – விதிமுறைகளை பின்பற்றுவதால் அபராதங்கள் தவிர்க்கப்படுகின்றன.
- நிறுவன நம்பகத்தன்மை – பாதுகாப்பு நடைமுறைகள் பணியாளர் மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்து நம்பிக்கை பெற உதவுகின்றன.

**பாதுகாப்பு மேலாண்மை அமைப்புகள்**



ISO 45001 போன்ற தரநிலைகள் தொழிற்சாலைகளில் பாதுகாப்பை முறைப்படி நிர்வகிக்க உதவுகின்றன. இதில் அபாயங்கள் அடையாளம் காணப்படுகின்றன, ஆபத்துகளுக்கான கட்டுப்பாடுகள் எடுக்கப்படுகின்றன மற்றும் செயல் திறன் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

**முதன்மை தலைமையும் பணியாளர் பங்கேற்பும்**

மேலாண்மை பாதுகாப்பில் முன்னிலை வகிக்க வேண்டும். கொள்கைகள் உருவாக்குதல், வளங்கள் ஒதுக்குதல், ஆய்வுகள் மற்றும் தொடர்பு ஆகியவை பணியாளர்களை பாதுகாப்பு நடைமுறைகளை கடைப்பிடிக்க ஊக்குவிக்கின்றன. பணியாளர்கள் தினசரி செயல்களில் அபாயங்களை அறிந்து, பாதுகாப்பற்ற நடைமுறைகளை அறிவிக்கவும், பயிற்சிகளில் பங்கேற்கவும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இது பொறுப்புணர்வையும் இணக்கமான செயல்பாடுகளையும் உருவாக்குகிறது.

**பயிற்சி மற்றும் விழிப்புணர்வு**

தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சிகள், அவசரநிலை திட்டங்கள், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் பயன்படுத்தல் ஆகியவை பணியாளர்களை எப்போதும் விழிப்புணர்வுடன் வைத்திருக்க உதவுகின்றன.




**நீண்டகால நன்மைகள்**

- செயல்திறன் அதிகரிப்பு – விபத்துகள் குறைவதால் உற்பத்தி இடையூறுகள் குறைகின்றன.
- மன உறுதி – பாதுகாப்பாக உணர்வதால் பணியாளர்கள் உற்சாகமாக செயல்படுகிறார்கள்.
- செலவு குறைப்பு – மருத்துவச் செலவுகள், வழக்குகள் குறைகின்றன.
- நிறுவன நம்பகத்தன்மை – பாதுகாப்பான தொழிற்சாலைகள் பெயரை உயர்த்துகின்றன.

பாதுகாப்பு என்பது செலவு அல்ல; இது ஒரு ஸ்ட்ராடஜிக் முதலீடு.

**முடிவுரை**

தொழிற்சாலை பாதுகாப்பு என்பது மேலாண்மையின் முக்கிய பொறுப்பு. நன்றாக அமைக்கப்பட்ட பாதுகாப்பு மேலாண்மை அமைப்புகள், பயிற்சிகள், பணியாளர் பங்கேற்பு மற்றும் தொடர்ச்சியான மேம்பாட்டு நடவடிக்கைகள் மூலம் தொழிற்சாலைகள் விபத்துகளை தடுக்கும், சொத்துகளை பாதுகாப்பது, செயல்திறனை மேம்படுத்த முடியும். பாதுகாப்பான பணியாளர்கள் மற்றும் இயந்திரங்கள் நிறுவனத்தின் நம்பகத்தன்மை, வலிமை மற்றும் நீண்டகால வளர்ச்சியை உறுதி செய்கின்றன.






# தொழில்துறையில் திறன் மேம்பாடு - தொழிலாளர்களின் வலுவான Workforce உருவாக்கம்

**அறிமுகம்**




இன்றைய தொழில்துறை சூழலில் தொழிலாளர் திறன் என்பதுதிறன், தரம் மற்றும் போட்டித் திறன் ஆகியவற்றின் அடிப்படை. தொழில்நுட்ப முன்னேற்றங்கள், ஆட்டோமேஷன் மற்றும் மாற்றமடையும் சந்தை தேவைகள் தொழில்களை தொடர்ந்துதிறன்களை மேம்படுத்துவதற்கும் புதுப்பித்தலுக்கும் அழைக்கின்றன. திறன் மேம்பாடு என்பது துணை நடவடிக்கை அல்ல; இது தொழிற்சாலை வளர்ச்சி, பணியாளர்களின் வேலை வாய்ப்பு, மற்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய முதலீடு ஆகும்.

**தொழில்துறையில் திறன் மேம்பாட்டின் முக்கியத்துவம்**

தொழிற்சாலை வெற்றியடைதல் இயந்திரங்களின் திறன் மற்றும் தொழில்நுட்பத்திற்கே அல்ல; அதை இயக்கும் மனிதர்களின் திறனுக்கு அதிகம் சார்ந்தது. திறமையான பணியாளர்கள் இயந்திரங்களை சரியான முறையில் பயன்படுத்தி, குறைந்த டவுன்டைம், உயர்ந்த தரம் மற்றும் பாதுகாப்பான வேலைநிலை உறுதி செய்கின்றனர். நவீன தொழில்நுட்பங்களை விரைவாக ஏற்கும் திறமையான பணியாளர்கள் நிறுவனங்களை விநியோக சந்தை மற்றும் ஏற்றுமதி சந்தைகளில் போட்டித்திறனுடன் வைத்துக் கொள்ள முடியும்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (MSME) களுக்கு திறன் மேம்பாடுதிறன் அதிகரிப்பு மற்றும் அனுபவம் குறைந்தவர்களுக்கு சுயம்பலத்தை மேம்படுத்தும் முக்கிய வழியாகும்.



**திறன் வித்தியாசத்தை நிரப்புதல்**

பல தொழிற்சாலைகள் இன்று எதிர்கொள்ளும் பெரிய சவால் கல்வி மற்றும் தொழிற்சாலை தேவைகளுக்கு இடையிலான திறன் வித்தியாசம் ஆகும். பல பணியாளர்கள் நவீன இயந்திரங்கள், டிஜிட்டல் கருவிகள் மற்றும் தர அமைப்புகளில் அனுபவமின்மையால் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் இதை நிரப்ப உதவுகின்றன:

- இயந்திரங்கள் மற்றும் செயல்முறைகள் தொடர்பான தொழில்நுட்ப பயிற்சி
- பாதுகாப்பு மற்றும் விதிமுறை பயிற்சி

- தரம் மற்றும் உற்பத்தித் திறன் மேம்பாட்டு திறன்கள்
- டிஜிட்டல் மற்றும் ஆட்டோமேஷன் திறன்கள்

இதன் மூலம் பணியாளர்கள் உற்பத்திக்கேற்ப தயாராக இருக்கின்றனர் மற்றும் செயல்திறன் நிலைகளை பூர்த்தி செய்ய முடியும்.

### பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

தொடர்ச்சியான பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு தொழில்துறையில் மிகவும் அவசியம். பயிற்சி மூலம் முன் உள்ள திறன்களை மேம்படுத்தி, மேம்பட்ட பணிகளுக்கான திறன் பெற முடிகிறது.

நிறுவனங்கள் பின்வருவன போன்ற நன்மைகளை பெறுகின்றன:

- செயல்திறன் உயர்வு
- குறைந்த தவறுகள் மற்றும் மீள்செயல்பாடு
- பணியாளர்களின் நம்பிக்கை மற்றும் மன உறுதி மேம்பாடு
- திறமையான பணியாளர்களின் நிலைத்திருப்பு

இத்துடன் பணியாளர் உள் வளர்ச்சியும் ஊக்கப்படுத்தப்படுகிறது, புதிய ஆட்சேர்ப்புகளை குறைக்க உதவும்.

### திறன் மேம்பாடு மற்றும் தர பண்பாடு

பயிற்சி பெற்ற பணியாளர்கள் நிர்வகிக்கையான நடைமுறைகள், தர அமைப்புகள் மற்றும் செயல்முறை ஒழுங்கு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளும். இதனால் ஒத்துழைப்பு, தர நிலைத்தன்மை மற்றும் வாடிக்கையாளர் திருப்தி அதிகரிக்கின்றன.

### முடிவுரை

திறன் மேம்பாடு தொழில்துறையின் நிலைத்த வளர்ச்சிக்கும், திறமையான, உறுதியான மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய Work Force உருவாக்கத்திற்கும் முக்கிய கருவியாகும். பயிற்சி, திறன் மேம்பாடு மற்றும் தொடர்ச்சியான கற்றல் மூலம் தொழிற்சாலைகள் தங்களின் செயல்திறனை மேம்படுத்தி, போட்டித் திறனையும், நிறுவன வளர்ச்சியையும் உறுதி செய்ய முடியும்.



# சிறுதொழில் ஏற்றுமதியை ஊக்குவிக்க தமிழக அரசு நிறுவனம் ஒப்பந்தம்

12 மத்திய ஆராய்ச்சி நிறுவனங்களுடன் கூட்டு

தமிழகத்தில் உணவு சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள, 500 சிறு, குறுந்தொழில் நிறுவனங்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்க, நாடு முழுதும் உள்ள, 12 மத்திய ஆராய்ச்சி நிறுவனங்களுடன், தமிழக அரசின் டி. என்.எபெக்ஸ் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

இதன் வாயிலாக, விவசாயிகள் மற்றும் நிறுவனங்களுக்கு தேவைப்படும் தொழில்நுட்பம், சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட உதவிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் வாயிலாக கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழகத்தில் உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியில் உள்ள இடைவெளியை குறைப்பது, வேளாண் விளைபொருட்கள் மற்றும் அவை சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பது போன்ற பணிகளில், தமிழக சிறு, குறு, நடுத்தர தொழில் துறையின் கீழ் செயல்படும் எபெக்ஸ் டி.என். எனப்படும், தமிழக உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டு கழகம் ஈடுபட்டுள்ளது.

இந்நிறுவனம், உலக வங்கியின், 27 கோடி ரூபாய் நிதியுதவியுடன் அடுத்த ஆண்டிற்குள், 500 சிறு, குறு உணவு பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இதற்காக அந்நிறுவனம், 12 மத்திய ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒப்பந்தத்தில் இணைந்துள்ளது.

இதுகுறித்து, தமிழக சிறு, குறு, நடுத்தர தொழில் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

தமிழகத்தில் மீன், இறைச்சி, அரிசி, பழங்கள், சிறுதானியங்கள் என, உணவு பொருட்களின் உற்பத்தி நன்கு உள்ளது.

அவற்றில் இருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களுக்கு, பல நாடுகளில் தேவை உள்ளது. அதேசமயம், சர்வதேச தரத்திற்கு ஏற்ப தயாரிக்கும் தொழில்நுட்பம், பேக்கிங், சந்தைப்படுத்துவது குறித்து பல சிறு, குறுந் தொழில் நிறுவனங்களுக்கு தெரிவதில்லை.

எனவே, அந்நிறுவனங் களுக்கு தேவைப்படும் தொழில்நுட்பம் சார்ந்த உதவிகளை வழங்குவதற்காக, தேசிய அளவில் முன்னணியில் உள்ள, 12 கல்வி, ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

## 12 மத்திய நிறுவனங்கள் எவை?

| | |
|---|---|
| ஐ.ஐ.டி., மெட்ராஸ் | தமிழக வேளாண் பல்கலை |
| தஞ்சை தேசிய உணவு தொழில்நுட்பம், தொழில்முனைவு, மேலாண்மை நிறுவனம் | சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் |
| கொச்சி மத்திய மீன்வள தொழில்நுட்ப நிறுவனம் | ஹைதராபாத் தேசிய இறைச்சி ஆராய்ச்சி நிறுவனம் |
| கட்டாக் மத்திய அரிசி ஆராய்ச்சி நிறுவனம் | பெங்களூரு இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம் |
| ஒடிஷா பெண் விவசாயிகளுக்கான மத்திய நிறுவனம் | லூதியானா அறுவடைக்கு பிந்தைய மத்திய பொறியியல், தொழில்நுட்ப நிறுவனம் |
| ஹைதராபாத் இந்திய சிறுதானிய ஆராய்ச்சி நிறுவனம் | மைசூர் மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் |

?

உங்களுக்கு தெரியுமா?

**உங்களுக்கு தெரியுமா?**



# அரிசியை விட 8 மடங்கு இரும்பு.!

## கம்பு சாப்பிட்டா என்ன ஆகும் தெரியுமா.?



கம்பில் இருக்கும் 8 மடங்கு அதிகமான இரும்புச்சத்து, நீரிழிவு கட்டுப்பாடு, எடை குறைப்பு, இதய பாதுகாப்பு உள்ளிட்ட நன்மைகளை மருத்துவர் விளக்குகிறார். கம்பை எவ்வாறு உணவில் சேர்ப்பது? முழு விவரம் இங்கே!

சிறுதானியங்களில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த கம்பு, தமிழர் வாழ்க்கை முறையில் ஆயிரம் ஆண்டுகளாக இடம் பிடித்திருக்கிறது. சங்க இலக்கியங்களிலும் கூட கம்பின் மகத்துவம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாக மருத்துவர் கார்த்திகேயன் தனது யூடியூப் சேனலில் கூறுகிறார். குறிப்பாக, கம்பில் அரிசியை விட 8 மடங்கு அதிக இரும்புச் சத்து இருப்பதாக அவர் வலியுறுத்துகிறார்.

**செரிமானத்தை மேம்படுத்தி, சர்க்கரை அளவை கட்டுப்படுத்தும்**

கம்பு நிதானமாக செரிமானம் ஆகும் தானியம். இதனால் நீண்ட நேரம் பசி ஏற்படாது. மேலும், இரத்த சர்க்கரை திடீரென உயர்வது தவிர்க்கப்படும். அதனால் நீரிழிவு நோயாளிகளுக்கு மிகுந்த பயன் அளிக்கும் என மருத்துவர் குறிப்பிடுகிறார்.

**எடை குறைக்க விரும்புவோருக்கான சிறந்த உணவு**

பசியை இயற்கையாகக் கட்டுப்படுத்தும் கம்பு, உடல் எடை குறைப்பு டயட்டில், குறிப்பாக சப்பாத்தி – வெள்ளை அரிசி தவிர்ப்போருக்கு, மிகவும் ஏற்ற உணவாக கருதப்படுகிறது. இது குளூட்டன் இல்லாத தானியம். கம்பு 100% குளூட்டன் ஃப்ரீ தானியம். குளூட்டன் அலர்ஜி உள்ளவர்கள் சாப்பிட சிறந்தது.




**அலர்ஜி, வீக்கம் மற்றும் புற்றுநோய் அபாயத்தை குறைக்கும் பாதுகாப்பு**

கம்பில் இயற்கையாகவே காணப்படும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள், பைட்டோகெமிக்கல்கள், பாலிபினால்கள் – உடலின் வீக்கம், அலர்ஜி, ஆக்ஸிடேட்டிவ் ஸ்டிரஸ் ஆகியவற்றை குறைத்து, இதய மற்றும் புற்றுநோய் அபாயத்திலிருந்து பாதுகாக்க உதவுகின்றன.

**உணவில் கம்பை சேர்க்கும் எளிய வழிகள்**

கம்பினால் செய்யக்கூடிய பல ருசியான உணவுகள்:

- கம்பு கூழ்
- கம்பு தோசை
- கம்பு சாதம்
- கம்பு அவல்
- கம்பு பொரியல்
- கம்பு பிரியாணி




**வாரத்தில் குறைந்தது இரண்டு நாட்கள் :**

- கம்பு சோறு
- புழுங்கல் அரிசி
- தினை சாதம்
- கேழ்வரகு அடை
- வரகு தோசை
- சோளம் தோசை
- குதிரைவாலி இட்லி

உள்ளிட்ட மாறுபட்ட சிறுதானியங்களை சேர்க்க வேண்டும் என மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள்.

## கம்பின் ஊட்டச்சத்து மதிப்பு

ஒரு கப் (சுமார் 160 கிராம்) கம்பு உணவில்:

| ஊட்டச்சத்து | மதிப்பு |
|---|---|
| கலோரி | 201 |
| புரதம் | 6 கிராம் |
| கொழுப்பு | 1.7 கிராம் |
| கார்போஹைட்ரேட் | 40 கிராம் |
| நார்ச்சத்து | 2 கிராம் |

இதனுடன் இரும்பு, ஃபோலேட், மெக்னீசியம், பாஸ்பரஸ், ஜிங்க், தயமின், நியாசின் உள்ளிட்ட பல தாதுக்கள் மற்றும் வைட்டமின் பி6 அதிக அளவில் உள்ளன.

## இறுதியாக..

கம்பு உடல் ஆரோக்கியத்திற்கு சிறந்தது. இது நீரிழிவு, உடல் எடை, செரிமானம், இதய நலம் போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கும் இயற்கையான தீர்வு என கருதப்படுகிறது. அன்றாட உணவில் கம்பை மிதமாகச் சேர்ப்பது நீண்டகால ஆரோக்கியத்திற்கு பெரும் பலன் அளிக்கிறது.




# வெற்றிகரமான தலைமைத்துவத்திற்கான ஒரு வழிகாட்டி

அறிமுகம்: இன்றைய வணிக உலகில் சிக்கல்களும் சவால்களும் நிறைந்திருக்கின்றன. ஒரு நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் எல்லா வேலைகளையும் தாங்களே சுமக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறார்கள். ஆனால், 'அதிக வேலை' என்பது 'அதிக வளர்ச்சிக்கு' சமமானது அல்ல என்கிறார் அனுபவம் வாய்ந்த தலைமை நிர்வாக அதிகாரி பில் கேனடி (Bill canady).




பில் கேனடி தனது 'The 80/20 CEO' புத்தகத்தின் மூலம், உலகளாவிய உற்பத்தி நிறுவனங்களை வெற்றிகரமாக மாற்றியமைத்த தனது அனுபவங்களை ஒரு செயல்முறைப் புத்தகமாக (Play Book) வழங்கியுள்ளார். இது வெறும் உற்பத்தித்திறன் சார்ந்த தந்திரம் அல்ல; இது ஒரு நிறுவனத்தை வழிநடத்தும் ஒட்டுமொத்த செயல்பாட்டு முறை (Operating System).

### 80/20 விதியின் அடிப்படை சூத்திரம் :

இந்தத் தத்துவத்தின் மையக்கருத்து மிகவும் எளிமையானது, ஆனால் வலிமையானது:

'உங்கள் வணிகத்தின் 80% முடிவுகள், வெறும் 20% செயல்பாடுகள், வாடிக்கையாளர்கள், தயாரிப்புகள் மற்றும் மனிதர்களிடமிருந்தே கிடைக்கின்றன.'

ஒரு சிறந்த தலைமை நிர்வாக அதிகாரி (CEO), அந்த மிக முக்கியமான 20% எவை என்பதைக் கண்டறிந்து, அதைப் பாதுகாத்து, அதனை மேலும் வளர்க்க வேண்டும். அதேசமயம், மீதமுள்ள 80% தேவையற்ற சுமையைக் குறைக்கும் துணிச்சலையும் கொண்டிருக்க வேண்டும்.

### நிறுவனத் தலைவர்களுக்கான 30 முக்கியச் சூத்திரங்கள்

### STRATEGY & FOCUS (வணிக வளர்ச்சி மற்றும் வியூகம்)

உங்கள் நிறுவனத்தின் வளர்ச்சியை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்ல, அதிகப்படியான வேலைகளைச் செய்வதை விட, சரியான வேலைகளைச் செய்வதே அவசியம். அதற்கான வழிகள் இதோ:

- 1 லாபத்தை மையப்படுத்திய வாடிக்கையாளர் தேர்வு: வெறும் வருவாயை Revenue மட்டும் தராமல், உங்கள் நிறுவனத்தின் 80% லாபத்திற்கு (Profit) காரணமான அந்த 20% முதன்மை வாடிக்கையாளர்களை அடையாளம் காணுங்கள். அவர்களுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

- குறைந்த லாபம் தரும் சுமைகளைக் களைதல்: அதிக உழைப்பை வாங்கி, மிகக்குறைந்த லாபத்தை மட்டுமே தரும் வாடிக்கையாளர்களுடனான வணிகத்தை மறுபரிசீலனை செய்யுங்கள். தேவைப்பட்டால், அத்தகைய ஒப்பந்தங்களில் இருந்து வெளியேறுவது அல்லது லாபத்திற்கு ஏற்ப மாற்றியமைப்பது அவசியம்.



- குறைந்த இலக்குகள் – அதிக கவனம்: ஆண்டுக்கு எண்ணற்ற திட்டங்களைக் குவித்து வைக்காமல், உத்திகள் சார்ந்த மிக முக்கியமான 3 முதல் 5 இலக்குகளை மட்டும் நிர்ணயம் செய்யுங்கள். சிதறாத கவனம் வெற்றியை எளிதாக்கும்.
- தேர்ந்தெடுத்த வளர்ச்சி (Selective Growth): கண்ணில் படும் எல்லா வாய்ப்புகளையும் ஏற்காதீர்கள். உங்கள் நிறுவனத்தின் தொலைநோக்குப் பார்வைக்கும் வளர்ச்சிக்கும் எது பொருந்துமோ, அதற்கு மட்டுமே 'ஆம்' என்று சொல்லப் பழகுங்கள்.
- தனித்துவமான சேவை (Core Offering): உங்களின் முதன்மையான தயாரிப்பு அல்லது சேவை எது என்பதில் மிகத் தெளிவாக இருங்கள். கவனத்தை திசைதிருப்பும் மற்ற உபரி வேலைகளைத் தவிர்த்து, உங்கள் பலத்தில் மட்டும் கவனம் செலுத்துங்கள்.
- அளவிடக்கூடிய முதலீடு (Measurable ROI) : நேரமோ அல்லது மூலதனமோ, எதுவாக இருந்தாலும் அதன் மூலம் கிடைக்கும் லாபத்தை (ROI) துல்லியமாகக் கணக்கிட முடிந்தால் மட்டுமே அந்தச் செயல்பாட்டில் முதலீடு செய்யுங்கள்.

### நிதி மேலாண்மை (Financial Discipline)


நிதி ஒழுக்கம் என்பது ஒரு வணிகத்தின் உயிர்நாடி. அதைச் சரியாகக் கையாளுவதற்கான வழிகள்:

- வாடிக்கையாளர் வாரியான லாபம்: மொத்த விற்பனையை (Sales) மட்டும் பார்க்காமல், ஒவ்வொரு வாடிக்கையாளரிடமிருந்தும் உங்களுக்குக் கிடைக்கும் நிகர லாபத்தைக் கணக்கிடுங்கள்.




- நஷ்டத்தைத் தவிர்க்கும் தயாரிப்புகள்: நஷ்டத்தை உண்டாக்கும் தயாரிப்புகளைக் கண்டறிந்து, அவற்றை உடனடியாக நிறுத்துங்கள் அல்லது லாபகரமாக மாற்றியமைக்கத் திட்டமிடுங்கள்.
- மதிப்பிற்கு முன்னுரிமை: அதிக எண்ணிக்கையிலான விற்பனையைத் (Volume) துரத்துவதை விட, மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்குத் தரமான சேவையை வழங்கி விலையை உயர்த்துங்கள்.
- பணப்புழக்கக் கட்டுப்பாடு: கடனுக்கான கால அவகாசத்தைக் குறைத்து, முன்பணம் (Advance Payment) பெறும் பழக்கத்தை அதிகப்படுத்துங்கள். இது பணப்புழக்கத்தை (Cash Flow) சீராக்கும்.
- தலைவரின் பார்வை (CEO Perspective): உங்கள் நிதி அறிக்கைகளை ஒரு கணக்காளராக (Accountant) பார்க்காமல், ஒரு தலைமை நிர்வாக அதிகாரியாக வளர்ச்சி நோக்கில் ஆய்வு செய்யுங்கள்.

**செயல்பாட்டுத் திறன்** (Operations & Process Excellence)




குறைந்த உழைப்பில் அதிக உற்பத்தியைப் பெறச் செயல்பாடுகளைச் சீரமைப்பது அவசியம்.

- பிழைகளைக் கண்டறிதல்: உங்கள் நிறுவனத்தில் ஏற்படும் 80% தாமதங்கள் அல்லது தவறுகளுக்குக் காரணமாக இருக்கும் அந்த 20% செயல்முறைகளை (Processes) அடையாளம் கண்டு சரிசெய்யுங்கள்.
- தரப்படுத்துதல் (Standardization): சிறந்த பலன் தரும் செயல்பாடுகளைத் தரப்படுத்துங்கள். தேவையற்ற மாற்றங்களைத் தவிர்த்து ஒரே சீரான முறையைப் பின்பற்றுங்கள்.
- தடைகளை நீக்குதல்: மதிப்பைக் கூட்டாத ஒப்புதல்கள் (Approvels), தேவையற்ற அறிக்கைகள் மற்றும் கூட்டங்களை (Meetings) முழுமையாகத் தவிருங்கள்.
- தடைக்கற்களை உடைத்தல்: ஒட்டுமொத்த உற்பத்தித் திறனைப் பாதிக்கும் முக்கியத் தடைகளில் (Bottlenecks) மட்டும் உங்கள் மேம்பாட்டுத் திட்டங்களைச் செலுத்துங்கள்.
- பொறுப்பை ஒப்படைத்தல்: ஒவ்வொரு பணிக்கும் ஒரு உரிமையாளரை (Process Owner) உருவாக்குங்கள். இது அன்றாடப் பிரச்சனைகளை நீங்களே முன்னின்று தீர்க்கும் அவசியத்தைக் குறைக்கும்.
- முக்கிய அளவீடுகள்: 'முதல் முறையே சரியாகச் செய்தல்' (First-time-right) மற்றும் 'சரியான நேரத்திற்கு வழங்குதல்' On-time delivery ஆகியவற்றை முக்கியக் குறிக்கோள்களாகக் கொள்ளுங்கள்.

**தலைமைத்துவம் மற்றும் மனிதவளம் (People & Leadership)**

சரியான மனிதர்களைச் சரியான இடத்தில் அமர்த்துவதே வெற்றிக்கான வழி.

- முக்கியப் பொறுப்புகள்: வணிகத்தின் வளர்ச்சியைத் தீர்மானிக்கும் மிக முக்கியமான பொறுப்புகளைக் கண்டறியுங்கள்.
- திறமைசாலிகளைத் தேர்ந்தெடுங்கள்: உங்கள் நிறுவனத்தின் சிறந்த பணியாளர்களை மிக முக்கியமான இடங்களில் அமர்த்துங்கள்; அவர்களை எல்லா இடங்களிலும் பரப்பிக் கழிக்காதீர்கள்.
- திறன் மேம்பாடு அல்லது வெளியேற்றம்: சரியாகப் பணிபுரியாதவர்களைக் கனிவான முறையிலேயே கையாளுங்கள்; அவர்களுக்குப் பயிற்சியளிப்பது அல்லது அவர்களைப் பணியிலிருந்து விடுவிப்பது குறித்து விரைந்து முடிவெடுங்கள்.
- சுயாட்சி அளித்தல் (Accountability) : சிறு சிறு விஷயங்களைக் கூடத் தலையிட்டு (Micromanagment) கவனிக்காமல், அவர்களுக்குப் பொறுப்புகளை வழங்கி முடிவுகளை (KPIs) மட்டும் கண்காணியுங்கள்.
- சிறந்தவர்களுக்கு முன்னுரிமை: பின்தங்கிய 20% பணியாளர்களைச் சரிசெய்வதை விட, உங்கள் நிறுவனத்தின் முதுகெலும்பாக இருக்கும் சிறந்த 20% பணியாளர்களுடன் அதிக நேரத்தைச் செலவிடுங்கள்.

**முடிவெடுத்தல் மற்றும் பண்பாடு (Culture & Decision Making)**

- ஐந்து முக்கியக் குறியீடுகள்: உங்கள் நிறுவனத்தின் வெற்றியைக் குறிக்கும் மிக முக்கியமான 5 KPIs–களை மட்டும் பின்பற்றுங்கள்.




- வாராந்திர ஆய்வு: செயல்பாடுகளை மாதம் ஒருமுறை அல்லது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பார்க்காமல், வாரம் ஒருமுறை ஆய்வு செய்யுங்கள்.
- விரைவான முடிவுகள்: 100% தரவுகளுக்காகக் காத்திருக்காமல், 80% விவரங்கள் கிடைத்தவுடனேயே விரைவாக முடிவெடுங்கள்.
- உடனடி நடவடிக்கை: தவறுகள் நடக்கும்போது அறிக்கைகளுக்காகக் காத்திருக்காமல் உடனடியாகச் சரிசெய்ய முற்படுங்கள்.
- வேலையல்ல, கவனம்: எப்போதும் 'பிஸியாக' இருப்பதை விட, இலக்கை நோக்கி 'கவனமாக' இருப்பதைப் பாராட்டும் கலாச்சாரத்தை உருவாக்குங்கள்.
- முடிவுகளுக்கு வெகுமதி: எவ்வளவு நேரம் வேலை செய்தார்கள் என்பதைக் காட்டிலும், என்ன முடிவுகளைக் கொண்டு வந்தார்கள் என்பதற்கு முன்னுரிமை அளித்து ஊக்கப்படுத்துங்கள்.
- தெளிவான தகவல் பரிமாற்றம்: நிறுவனத்தின் இலக்குகளைத் திரும்பத் திரும்பச் சொல்லுங்கள். தெளிவான தகவல் குழப்பத்தைக் குறைக்கும்.
- முன்மாதிரியாகத் திகழுங்கள்: 80/20 சிந்தனை முறையை உங்கள் நேர மேலாண்மை மற்றும் முடிவுகளில் நீங்களே முன்னின்று பின்பற்றுங்கள்.

MSME ***நிறுவன உரிமையாளர்களுக்கான செய்தி***

வளர்ச்சி என்பது அதிக வேலைகளைச் செய்வதால் வருவதல்ல; மிக முக்கியமான வேலைகளைச் சிறப்பான முறையிலும், வேகமாகவும், தொடர்ச்சியாகவும் செய்வதால் மட்டுமே கிடைக்கிறது.


**EEDISSIA**

**உறுப்பினர்கள் எண்ணிக்கையே சங்கத்தின் பலம்**

**ஈடிசியா உறுப்பினர்கள் கவனத்திற்கு...**

2025-2026 நிதியாண்டிற்கான சந்தா புதுப்பித்தல் ஏப்ரல் 1, 2025 முதல் துவங்குகிறது. ஆகவே ஈடிசியா உறுப்பினர்கள் அனைவரும் சந்தா கட்டணத்தைச் செலுத்தி தங்கள் உறுப்பினர் பதிவை புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். புதிய உறுப்பினர்கள் வரவேற்கப்படுகின்றனர். ஆன்லைனில் அனுப்புகிறவர்கள் மறவாமல் அதற்கான ஆதாரத்தை ஈடிசியாவிற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வருடாந்திர சந்தா புதுப்பித்தல் விபரம்

**Unit Member Renewal : Rs.3540/-** **Associations & Institutions : Rs.5310/-** *Including 18% GST*

**New Member Subscription : Rs.4130/-**

**வங்கிக் கணக்கு விபரம்**


| | | |
|---|---|---|
| Account Name | : | Erode District Small Industries Association [EEDISSIA] |
| Bank Name | : | Canara Bank, Cutchery Street, Erode. |
| Account No. | : | 1104101015362 |
| IFSC Code No. | : | CNRB0001104 |

Canara Bank

ERODE DISTRICT SMALL INDUSTRIES ASSOCIATI

BHIM UPI

# 2026-ல் AI



## MSME உரிமையாளர்களுக்கான ஒரு வழிகாட்டி

2026-ஆம் ஆண்டில், AI என்பது வெறும் 'தொழில்நுட்பம்' மட்டுமல்ல. அது உங்கள் நிறுவனத்தின் ஊழியர், உதவியாளர், ஆய்வாளர் மற்றும் ஒட்டுமொத்த நிர்வாக அமைப்பு.

வெற்றி பெறப்போகும் தொழில்முனைவோர் AI-ன் தொழில்நுட்ப அறிவை (Technical Knowledge) வளர்த்துக் கொண்டவர்கள் அல்ல; AI-ஐ நடைமுறைக்கு (Practical Use) பயன்படுத்தத் தெரிந்தவர்கள் மட்டுமே.

இதை மிக எளிமையாகப் புரிந்து கொள்வோம் :



### 2026-ல் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டிய 4 வகை AI

1. ஜெனரேட்டிவ் AI (Generative AI) – உங்கள் சிந்தனை உதவியாளர்

- இது என்ன செய்யும் : உங்களுக்காகத் தகவல்களை உருவாக்கும் (உரை, மின்னஞ்சல், கோப்புகள், விளம்பரங்கள்).
- யார் இவர் : 24 மணிநேரமும் வேலை செய்யும் உங்கள் புத்திசாலி உதவியாளர்.
- பயன்கள் : ISO நடைமுறைகளை நிமிடங்களில் எழுதுவது, வாடிக்கையாளர்களுக்கு வாட்ஸ்அப் மெசேஜ் அனுப்புவது, ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் கோப்புகளைத் தயாரிப்பது.
- லாபம் : நேரம் மிச்சமாகும்; ஆள் பற்றாக்குறை குறையும்.

2. ஏஜென்டிக் AI (Agentic AI) - செயலில் இறங்கும் 'வேலையாள்'



- இது என்ன செய்யும்: வெறும் பதில் மட்டும் சொல்லாமல், உங்களுக்காகச் செயலில் இறங்கும். மீட்டிங் புக் செய்வது, வாடிக்கையாளர்களைத் தொடர்பு கொள்வது போன்றவற்றைத் தானாகவே செய்யும்.
- யார் இவர் : சுயமாகச் சிந்தித்து வேலை செய்யும் உங்கள் டிஜிட்டல் ஊழியர்.
- பயன்கள் : வாடிக்கையாளர் விவரங்களைப் புதுப்பிப்பது, தணிக்கை (Audit) நினைவூட்டல்களை அனுப்புவது, புகார்களுக்குத் தீர்வு காண்பது.
- லாபம் : நீங்கள் ஒவ்வொரு வேலையையும் கண்காணிக்க வேண்டிய அவசியம் இல்லை.

3. பிரிடிக்டிவ் AI (Predictive AI) - முடிவெடுக்கும் பங்குதாரர்




- இது என்ன செய்யும்: பழைய தரவுகளை வைத்து எதிர்காலத்தைக் கணிக்கும்.
- யார் இவர்: தரவுகளின் அடிப்படையில் கணிக்கும் உங்கள் பிசினஸ் ஜோதிடர்.
- பயன்கள்: எந்திரங்கள் எப்போது பழுதாகும்? விற்பனை எவ்வளவு இருக்கும்? தரக் குறைபாடு எங்கே வரும்? என்பதை முன்கூட்டியே சொல்லும்.
- லாபம்: நஷ்டம் குறையும்; சிறந்த திட்டமிடல் சாத்தியமாகும்.

4. சிஸ்டமிக் AI (Systamic AI) - பிசினஸ் ஆட்டோபைலட்

- இது என்ன செய்யும் : விற்பனை, உற்பத்தி, கணக்கு வழக்கு என அனைத்தையும் ஒன்றாக இணைக்கும்.
- யார் இவர் : உங்கள் பிசினஸைத் தானாக இயக்கும் ஆட்டோபைலட் (Autopilot).
- பயன்கள் : ஒரு ஆர்டர் வந்தவுடன் அதுவே உற்பத்தியைத் தொடங்கி, தரப் பரிசோதனை செய்து, மேலாளருக்கு ரிப்போர்ட் அனுப்பும்.
- லாபம் : குழப்பங்கள் நீங்கும்; பிசினஸ் சீராக வளரும்.

## உற்பத்தித் திறனை அதிகரிக்க 3 வழிகள்

1. AI –யிடம் பேசுங்கள் (Type செய்யாதீர்கள்): டைப் செய்வதை விடப் பேசுவது 3 மடங்கு வேகமானது. உங்கள் போனில் AI–யிடம் பேசி கட்டளைகளைக் கொடுங்கள். 'இந்த மாத உற்பத்திப் புகாரை ஆய்வு செய்து அறிக்கை தயார் செய்' என்று வாய்மொழியாகச் சொன்னாலே போதும்.
2. உங்களைப் போன்ற ஒரு AI –ஐ உருவாக்குங்கள் (AI Clone) : உங்கள் அனுபவம், பேசும் முறை மற்றும் முடிவெடுக்கும் திறன் கொண்ட ஒரு டிஜிட்டல் 'நீங்கள்'. நீங்கள் தூங்கும் போதும் இது உங்கள் வாடிக்கையாளர்களுக்குப் பதில் சொல்லும், ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கும்.
3. வைப்கோடிங் (vibe Coding) : உங்களுக்குத் தொழில்நுட்ப அறிவு (Coding) தேவையில்லை. 'எனக்கு ஆடிட் பார்ப்பதற்கு ஒரு ஆப் வேண்டும்' என்று சாதாரணமாகச் சொன்னால் போதும், AI அந்த ஆப்பை உங்களுக்காகக் கட்டித் தரும்.

## நீங்கள் கவனிக்க வேண்டிய AI கருவிகள்

Lovable : பேசினாலே உங்களுக்கான ஆப் (APP) உருவாக்கித் தரும்.

DELPHI AI : உங்கள் அறிவைப் போலவே சிந்திக்கும் உங்கள் 'டிஜிட்டல் இரட்டையரை' உருவாக்கும்.

SINTARA : உங்கள் பிசினஸ் வேலைகளைத் தானாகச் செய்யும் ஏஜென்ட்டுகளை உருவாக்கும்.

2026–ல் AI என்பது மனிதர்களை நீக்குவதற்காக அல்ல; குழப்பம், தாமதம் மற்றும் பிறரைச் சார்ந்திருக்கும் நிலையை நீக்குவதற்காக.




இனி உங்கள் கேள்வி இதுவல்ல :

'நான் AI பயன்படுத்த வேண்டுமா?'

உங்கள் கேள்வி இதுவாகத்தான் இருக்கவேண்டும் :

'என் பிசினஸின் எந்தப் பகுதியை முதலில் AI வசம் ஒப்படைக்க வேண்டும்?'

GAME BOARD


# மகேந்திரசிங் தோனி

## ஒரு சகாப்தத்தின் நாயகன்



இந்திய கிரிக்கெட் வரலாற்றின் மிகச்சிறந்த தலைவர்களில் ஒருவரான எம்.எஸ். தோனி, அமைதி, ஒழுக்கம் மற்றும் தீர்க்கமான முடிவெடுக்கும் திறனுக்கு ஒரு சிறந்த அடையாளமாகத் திகழ்கிறார். ராஞ்சியின் ஒரு நடுத்தர வர்க்கக் குடும்பத்தில் பிறந்து, இந்திய இரயில்வேயில் டிக்கெட் பரிசோதகராகப் பணியாற்றிய அவர், தனது விடாமுயற்சியால் இந்திய கிரிக்கெட் அணியில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்தார்.

ஆட்டத்தின் போக்கை நுணுக்கமாகக் கணிக்கும் திறன், தெளிவான தகவல் தொடர்பு மற்றும் நெருக்கடியான சூழல்களிலும் பதற்றமில்லாத 'கூலான' அணுகுமுறை ஆகியவற்றிற்குப் பெயர் பெற்றவர் தோனி. இவரது தலைமையில் இந்தியா 2007 டி20 உலகக்கோப்பை மற்றும் 2011 ஒருநாள் உலகக்கோப்பை என வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிகளைக் குவித்தது.




சென்னை சூப்பர்கிங்ஸ் அணியின் நீண்டகால கேப்டனாக, நம்பிக்கை மற்றும் நிலைத்தன்மை கொண்ட ஒரு கலாச்சாரத்தை உருவாக்கி, ஐந்து முறை ஐபிஎல் (IPL) கோப்பைகளை வென்று தந்துள்ளார். கிரிக்கெட்டிற்கு அப்பால், தலைமைப் பண்பு, குழுப்பணி மற்றும் இலக்கைவிட பயணத்தின் மீதான கவனமே வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதற்கு அவர் ஒரு மிகச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறார்.

### எம்.எஸ். தோனி: சாமானியன் டூ சரித்திர நாயகன் - ஒரு வெற்றிக் கதை!

இந்திய கிரிக்கெட்டின் 'தல' என்று அழைக்கப்படும் மகேந்திர சிங் தோனியின் வாழ்க்கை, வெறும் விளையாட்டுச் செய்தி மட்டுமல்ல; அது ஒவ்வொரு சாமானியனும் படிக்க வேண்டிய ஒரு உத்வேகப் பாடம்.

### 1. ஆரம்ப கால வாழ்க்கை மற்றும் போராட்டங்கள்

- பிறப்பு: ஜூலை 7, 1981 அன்று ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் ஒரு நடுத்தர குடும்பத்தில் பிறந்தார்.
- கால்பந்து டூ கிரிக்கெட்: ஆரம்பத்தில் ஒரு கால்பந்து கோல்கீப்பராக இருந்தவர், பயிற்சியாளரின் ஆலோசனையால் விக்கெட் கீப்பராக மாறினார்.
- விடாமுயற்சி: முறையான வசதிகள் இல்லாத போதும், மாநில அளவிலான தேர்வுகளில் பலமுறை நிராகரிக்கப்பட்ட போதும் தனது பயிற்சியைக் கைவிடவில்லை.

### 2. இரயில்வே டிக்கெட் பரிசோதகர் டூ இந்திய அணி

- கடமை: கரக்பூர் இரயில் நிலையத்தில் டிக்கெட் பரிசோதகராக (TC) பணியாற்றிக் கொண்டே கிரிக்கெட்டைத் தொடர்ந்தார். இது அவருக்கு நேர மேலாண்மை மற்றும் மக்கள் தொடர்பைக் கற்றுக்கொடுத்தது.
- அறிமுகம்: 2004-ல் இந்திய அணியில் அறிமுகமானார். முதல் சில போட்டிகளில் ரன் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தாலும், 2005-ல் பாகிஸ்தானுக்கு எதிராக 148 ரன்கள் குவித்து உலகையே திரும்பிப் பார்க்க வைத்தார்.

### 3. கேப்டன்கூல் மற்றும் சாதனைகள்




- வெற்றித் தலைமை: 2007–ல் இளம் இந்திய அணியுடன் டி20 உலகக்கோப்பையை வென்றார். 2011–ல் ஒருநாள் உலகக்கோப்பையையும், சாம்பியன்ஸ் டிராபியையும் வென்று தந்து, மூன்று ஐசிசி கோப்பைகளை வென்ற ஒரே கேப்டன் என்ற சாதனை படைத்தார்.
- சிஎஸ்கே சகாப்தம்: சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் முகமாக மாறி, 5 முறை ஐபிஎல் கோப்பைகளை வென்று தந்துள்ளார்.

### சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கான (MSME) 10 மேலாண்மை பாடங்கள்

தோனியின் தலைமையிலிருந்து தொழிலதிபர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியப் பாடங்கள்:

- **நெருக்கடியிலும் அமைதி** : இக்கட்டான சூழலில் பதற்றமடையாதீர்கள்; பதற்றம் தவறான முடிவுகளுக்கே வழிவகுக்கும்.
- **குழுவை நம்புங்கள்** : உங்கள் ஊழியர்களை நம்பி அவர்களுக்கு உரிய அதிகாரத்தை வழங்குங்கள்.
- **அனுபவம் + வேகம்** : அனுபவத்தையும், இளைஞர்களின் துடிப்பையும் சமமாகப் பயன்படுத்தி புதுமைகளைப் புகுத்துங்கள்.
- **பொறுப்பேற்றல்** : தோல்விக்கு யாரையும் குறை கூறாமல், தலைமைப் பொறுப்பை நீங்களே ஏற்கக் கற்றுக்கொள்ளுங்கள்.
- **வேகமான செயல்பாடு** : விரைவாக முடிவெடுத்து, அதைவிட வேகமாகச் செயல்படுத்துங்கள்.
- **செயல்முறையில் கவனம் (Process)** : கைதட்டல்களை எதிர்பாராமல், உங்கள் பணியின் தரத்தில் மட்டும் கவனம் செலுத்துங்கள்.




- **நிலைத்தன்மை** : ஒருநாள் ஜொலிப்பதை விட, நீண்ட காலத்திற்கு நிலையான உழைப்பைக் கொடுப்பதே சிறந்தது.
- **சூழலுக்கு ஏற்ப வியூகம்** : கோட்பாடுகளைப் பிடித்துக் கொண்டிருக்காமல், நிலவரத்திற்கு ஏற்ப யுக்திகளை மாற்றியமைக்க வேண்டும்.
- **அமைதியான தலைமை** : ஊழியர்களைக் கண்காணிக்க வேண்டுமே தவிர, அவர்களின் சுதந்திரத்தில் தலையிடக்கூடாது.
- **வெற்றிகரமாக முடித்தல்** : மிக முக்கியமான நேரத்தில் முடிவுகளைத் துல்லியமாக வழங்கி பணியை நிறைவு செய்யுங்கள்.

### தொழிலுக்கான தோனி தத்துவம் (One - Line Philosophy)

**'ஆணவமின்றி இருங்கள், உங்கள் செயல்பாடுகளை நம்புங்கள்,
உங்கள் குழுவிற்கு அதிகாரம் கொடுங்கள் மற்றும்
அழுத்தமான சூழலிலும் வெற்றியைத் தேடித் தாருங்கள்.'**

# வடிவேலு மேலாண்மை



**1. அடித்தளம் பலமாக இருக்கட்டும்!**

**செயல்குறிப்பு :** ஒரு திட்டத்தைத் தொடங்கும் முன், அதன் அடிப்படை விவரங்கள், நிதி ஆதாரம் மற்றும் சந்தை நிலவரத்தை ஆழமாக ஆராயுங்கள்.

**வடிவேலு டயலாக் :** 'பில்டிங் ஸ்ட்ராங்கு... பேஸ்மெண்ட் வீக்கு!'

**விளக்கம்** : உங்கள் வணிகத்தின் அடித்தளம் (பேஸ்மெண்ட்) உறுதியாக இருந்தால் மட்டுமே, அதன் கட்டிடம் (பில்டிங்) நிலைத்து நிற்கும்.

**2. இப்போது செய், அப்புறம் பார்க்கலாம் வேண்டாம்!**

**செயல் குறிப்பு :** வணிகத்தில் ஏற்படும் சிக்கல்களை அல்லது முக்கியமான வேலைகளைத் தள்ளிப் போடாதீர்கள். உடனடியாகத் தீர்க்கும் மனநிலையுடன் இருங்கள்.

**வடிவேலு டயலாக் :** 'இப்ப வர்றேன்... அப்ப வரேன்... ஆனா வரமாட்டேன்!'

**விளக்கம் :** இன்று செய்ய வேண்டிய வேலையை 'அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்' என்று தள்ளிப்போட்டால், இலக்குகளை அடையமுடியாது.

**3. அதிக நம்பிக்கையால் அசட்டையாக இருக்காதீர்கள்!**

**செயல் குறிப்பு :** உங்கள் வெற்றி வாய்ப்புகளை மிகைப்படுத்திப் பார்க்காதீர்கள். வெற்றியை எளிதாகக் கருதி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தவிர்க்கக்கூடாது.

**வடிவேலு டயலாக் :** 'அப்படியே ஒரு குட்டித் தூக்கம் போட்டு எந்திரிச்சு வந்தா, எல்லாம் முடிஞ்சு போச்சு!'

**விளக்கம் :** போட்டியை குறைத்து மதிப்பிடாதீர்கள். சிறிய கவனக்குறைவும் பெரிய இழப்பை ஏற்படுத்தலாம்.

**4. வாடிக்கையாளர் ஐடியாவுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்!**

**செயல் குறிப்பு :** உங்கள் வாடிக்கையாளர்களிடம் இருந்து தொடர்ந்து பின்னூட்டம் (Feedback) பெறுங்கள். அவர்களின் தேவைக்கேற்ப உங்கள் தயாரிப்பு அல்லது சேவையை மாற்றுங்கள்.




**வடிவேலு டயலாக் :** 'இந்த ஐடியா எப்படி இருக்கு?'

**விளக்கம் :** வாடிக்கையாளரின் கருத்துதான் உங்கள் வணிக உத்தியின் அடுத்த கட்டத்தைத் தீர்மானிக்கும்.

### 5. பண விஷயத்தில் விழிப்புணர்வு அவசியம்!




**செயல்குறிப்பு :** பணப்புழக்கத்தை (Cash Flow) தினமும் கண்காணிப்பது மிக முக்கியம். வாடிக்கையாளர்களிடம் வரவேண்டிய நிலுவைத் தொகையை (Dues) உடனடியாக வசூலிக்க வேண்டும்.

**வடிவேலு டயலாக் :** 'போனவாரம் கொடுத்த காசு இன்னும் வரலை... அதுல பாதி எங்கேயோ போயிருச்சாம்!'

**விளக்கம் :** பணம் எங்கே போகிறது, எப்போது வருகிறது என்பதில் முழுத் தெளிவு இருக்கவேண்டும்.

### 6. மாற்றத்திற்குத் தயாராகுங்கள்!



**செயல் குறிப்பு :** சந்தையில் ஏற்படும் புதிய தொழில்நுட்பங்கள், டிஜிட்டல் முறைகள் மற்றும் வாடிக்கையாளர் விருப்பங்களுக்கு ஏற்ப உங்கள் வணிகமுறையை மாற்றிக் கொள்ளத் தயாராகுங்கள்.

**வடிவேலு டயலாக்:** 'அவ்வ்வ்வ்... இப்ப ஒரு மாறுதல் தேவை...'

**விளக்கம் :** புதிய வழிகளை ஏற்க மறுத்தால், பழைய பாதையிலேயே நின்று கொண்டிருக்கநேரிடும்.

### 7. குழுவுக்குத் தைரியம் கொடுங்கள்!




**செயல் குறிப்பு :** சவால்கள் வரும்போது குழு உறுப்பினர்கள் மனச்சோர்வு அடையாமல், அவர்களை உற்சாகப்படுத்தி, நம்பிக்கையுடன் செயல்பட ஊக்கப்படுத்துங்கள்.

**வடிவேலு டயலாக் :** 'எதுக்கு எடுத்தாலும் சும்மா ‘அய்யோ அய்யோ‘ன்னு இருக்காதே...'

**விளக்கம் :** தலைவரின் ஊக்கமே குழுவின் மிகப் பெரிய பலம்.

### 8. சரியான முடிவெடுக்க அவசரப்படாதீர்கள்!

**செயல் குறிப்பு:** முக்கியமான முடிவுகளை எடுக்கும்முன், எல்லா தகவல்களையும் அலசி ஆராயுங்கள். அவசரமாக முடிவெடுத்து, பின்விளைவுகளைச் சந்திக்காதீர்கள்.

**வடிவேலு டயலாக்:** 'வரட்டும், வரட்டும்... அப்புறம் இருக்கு கதை!'

**விளக்கம் :** ஒரு முடிவின் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதை யோசித்த பிறகே செயல்படத் தொடங்கவேண்டும்.

### 9. உங்கள் பிராண்டுக்கு ஒரு 'கெத்து' கொடுங்கள்!




**செயல் குறிப்பு :** உங்கள் தயாரிப்பின் தரத்திலும், உங்கள் வணிகத்தின் தனித்துவமான அடையாளத்திலும் (Brand Identity) உறுதியாக இருங்கள்.

**வடிவேலு டயலாக்:** 'எனக்கொரு கெத்து இருக்கு...'

**விளக்கம் :** தனித்துவமான பிராண்ட் மதிப்பைக் (Brand Value) காப்பாற்றினால் மட்டுமே சந்தையில் நீங்கள் தனித்துத் தெரிவீர்கள்.



### 10. ஆபத்துகளைக் கணக்கிட்டு எடுங்கள்!

**செயல்குறிப்பு :** வணிகத்தில் ஆபத்து எடுப்பது தவிர்க்க முடியாதது. ஆனால், கண்மூடித்தனமாகச் செயல்படாமல், அதன் விளைவுகளைத் தெளிவாகக் கணக்கிட்டு, முன்னெச்சரிக்கையுடன் ரிஸ்க் எடுக்கவேண்டும்.

**வடிவேலு டயலாக் :** 'ரிஸ்க் எடுக்கறதுலாம் எனக்கு ரஸ்க் சாப்ட்ற மாதிரி...'

**விளக்கம் :** ரஸ்க் சாப்பிடுவது எளிது, ஆனால் தவறான ஆபத்து (Risk) வணிகத்தையே முறித்துவிடலாம். எனவே, சிந்தித்தே ரிஸ்க் எடுக்கவேண்டும்.

## இன்ஸ்டாகிராம்

அன்புள்ள Eedissia உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம்,
நம் வளர்ச்சிக்கு அனைவரும் ஒன்றிணைவோம்!

உங்களுக்காக பிரத்யேகமாக இன்ஸ்டாகிராம் QR குறியீட்டை உருவாக்கியுள்ளோம்.


இதன் மூலம் பல பயனுள்ள நிகழ்வுகள், முக்கிய அறிவிப்புகள் மற்றும் தொழில் தகவல்களை உடனுக்குடன் பெற, இந்தக் குறியீட்டை scan செய்து உடனடியாக எங்கள் பக்கத்தை Follow செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

@EEDISSIA1980

நமது சங்கம் மற்றும் நிகழ்வுகளின் செய்திகள் அதிக உறுப்பினர்களைச் சென்றடைந்து நம் சங்கம் மேலும் வெற்றியடைய, இந்த QR குறியீட்டை உங்கள் நண்பர்கள் மற்றும் தொழில் தொடர்புடையவர்களுக்கு தவறாமல் பகிருங்கள்.

அவர்களையும் Follow செய்யுமாறு ஊக்குவித்து, நம் வளர்ச்சிப் பயணத்தில் கைகோர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

# ‘ஹியூமன் இன்ஜினியரிங்‘ (Human Engineering)




நாம் இன்று அறிந்துகொள்ள வேண்டிய ‘ஹியூமன் இன்ஜினியரிங்‘ (Human Engineering) நுட்பங்கள் மிகவும் அவசியமானது மற்றும் நடைமுறை வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையக்கூடியது.

## ஈகோ : உறவுகளின் எதிரியா? அல்லது முன்னேற்றத் தின் தடையா?

மனித உறவுகளில் ஏற்படும் பெரும்பாலான சிக்கல்களுக்கு அடிப்படை காரணியாக இருப்பது ஈகோ (Ego).

இது பெரும்பாலும் நமது மனதோடு தொடர்புடையது. மற்றவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்ற தேடலில் நாம் நம்முடைய உண்மையான சந்தோஷத்தைத் தொலைத்து விடுகிறோம்.

## 1. ஈகோ மோதல்கள் உருவாகும் விதம்




ஈகோ என்பது ஒரு தற்காப்பு அரண் போலச் செயல்படுகிறது. அடுத்தவர் நம்மைச் சிறுமைப்படுத்தும்போதோ அல்லது காயப்படுத்தும்போதோ, நாம் எதிர்வினையாற்றுகிறோம். குறிப்பாக, பின்வரும் நான்கு அணுகுமுறைகள் (4 Cs) நம்மிடம் இருந்தால், நண்பர்கள் விலகி எதிரிகள் உருவாவார்கள்:

Condamn: மற்றவர்களைக் கண்டிப்பது.
Criticize: எப்போதும் குறைகளை விமர்சிப்பது.
Complain: எதற்கெடுத்தாலும் புகார் கூறுவது.
Compare: ஒருவரை மற்றொருவருடன் ஒப்பிட்டுத் தாழ்த்துவது.

## 2. ‘அட்வைஸ்‘ ஏன் ஆபத்தானது?




நாம் அடுத்தவர்களுக்கு அறிவுரை (Advice) சொல்லும் போது, அறியாமலேயே ’I am ok, you are Not Ok’ (நான் சொல்வது சரி, உனக்குத் தெரியவில்லை) என்ற மனோபாவத்தை வெளிப்படுத்துகிறோம். இது அடுத்தவரின் ஈகோவை நேரடியாகப் பாதிக்கிறது. இதனால் உறவுகளில் விரிசல் ஏற்படுகிறது.

### 3. மூளையின் செயல்பாடும் ஈகோவும்



**நமது மூளையின் செயல்பாட்டிற்கும் ஈகோவிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு:**

**லிம்பிக் மூளை** (Limbic Brain): இது உணர்ச்சிகளுக்கு உடனே ரியாக்ட் (React) செய்யும். கோபம், ஈகோ மோதல்கள் இங்கிருந்தே பிறக்கின்றன.

**ப்ரீ-பிரண்டல் கார்டெக்ஸ்** (Prefrontal Cortex): இது சிந்தித்துச் செயல்படும் பகுதி. விழிப்புணர்வுடன் (Awareness) செயல்படும்போது, இந்த பகுதி மேலோங்கி நற்பலன்களைத் தரும்.

### ✨ தீர்வை நோக்கிய புதிய அணுகுமுறை



**உறவுகள் மேம்படவும், அமைதி நிலவவும் நாம் கடைபிடிக்க வேண்டிய மாற்றங்கள்:**

**அடுத்தவர் ஈகோ பாதுகாப்பு** ( Protecting Others Ego): நம்முடைய ஈகோவை முன்னிறுத்தாமல், மற்றவர்களின் கண்ணியத்தைப் பாதுகாக்கும்போது மோதல்கள் குறைகின்றன. அங்கே மனித உறவு (Humanity) வளர்கிறது.

**மாற்று மனோபாவம்**: 'I am OK, You are OK' அல்லது 'I am NOT OK, You are OK' (தேவைப்படும் இடங்களில் விட்டுக்கொடுத்தல்) என்ற அணுகுமுறை ஈகோ இல்லாத ஒரு ஆரோக்கியமான சூழலை உருவாக்குகிறது.

**முயற்சி எடுப்பவராக இருங்கள்**: ஒரு சிக்கல் வரும்போது இரண்டு பேருமே ஈகோவை விட வேண்டிய அவசியமில்லை. யாராவது ஒருவர் (முதிர்ச்சியடைந்த ஒருவராக நீங்கள்) முதலில் இறங்கி வந்தாலே அந்தப் பிரச்சனை முடிவுக்கு வரும்.

**வாழ்க்கைக்கான பாடம்**

**வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்க** :

அறிவுரை கூறுவதைத் தவிர்ப்போம்...

மனதாரப் பாராட்டி ஊக்குவிப்போம்...

தவறு – சரி என்ற வாதத்தை விட, உறவே முக்கியம் என்று கருதுவோம்...

**சுருக்கமாக**

அடுத்தவர் ஈகோவை டேமேஜ் செய்யாமல் அவர்களின் மதிப்பைப் பாதுகாப்பதே சிறந்த மனிதப் பண்பு . விழிப்புணர்வுடன் இருப்போம்,

நம்மை சுற்றி இருப்பவர்களின் பிஹேவியர் தான் இதமான ரிதமான வாழ்வியலை உருவாக்குகிறது எனும்பொழுது அவர்களோடு அனுசரணையாக குறிப்பாக you are OK, யூ ஆர் ரைட் என்ற மனநிலையோடு அனுசரித்து குறிப்பாக நமது ஈகோவை அனுசரித்து பழகிக் கொண்டாலே போதும் வாழ்க்கை வசப்படும்.....

இன்றைய ஹியூமன் இன்ஜினியரிங் கிராஜ்⁶வேஷன் என்ற தலைப்பில் நாம் அறிந்து கொண்ட இந்தக் கருத்துகள் நம் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் இந்தப் புரிதலை, வாழும் கலையை வாழ்க்கைக்கான பாடத்தை அனுதினம் கடைப்பிடிப்போம் .




---

# தொழில்துறைகளில் தர மேலாண்மை அமைப்பின் (Quality Management Systems - QMS) முக்கியத்துவம்

**அறிமுகம்**

இன்றைய தொழில்துறை சூழலில், தரம் என்பது வாடிக்கையாளர் திருப்தி மற்றும் தொழில்களின் நிலைத்த வளர்ச்சிக்கான முக்கிய அடித்தளமாகும். தரமான பொருட்கள், நேர்த்தியான விநியோகம் மற்றும் சட்டப்பூர்வ விதிமுறைகளின் பின்பற்றுதல் ஆகியவை அனைத்தும் ஒரு சிறந்ததர மேலாண்மை அமைப்பு (Quality Management System – QMS) மூலம் மட்டுமே சாத்தியமாகின்றன. ISO 9001 போன்ற தரநிலைகள், செயல்முறை கட்டுப்பாடு மற்றும் தொடர்ச்சியான மேம்பாட்டை மையமாகக் கொண்டு தொழில்களுக்கு வழிகாட்டுகின்றன.




**தர மேலாண்மை அமைப்பு (Quality Management Systems - QMS)**
**ஒரு சுருக்கமான பார்வை**

QMS என்பது நிறுவனத்தின் செயல்பாடுகளை திட்டமிட, செயல்படுத்த, கண்காணிக்க மற்றும் மேம்படுத்த உதவும் ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பு ஆகும். மூலப்பொருள் கொள்முதல் முதல் இறுதிப் பொருள் விநியோகம் வரை, ஒவ்வொரு கட்டத்திலும் தரம் உறுதி செய்யப்படுவதற்கு இது வழிவகுக்கிறது.

QMS இன் முக்கிய கோட்பாடுகள் வாடிக்கையாளர் மையக் கவனம், மேலாண்மை தலைமைத்துவம், செயல்முறை அணுகுமுறை, ஆபத்து அடிப்படையிலான சிந்தனை மற்றும் தொடர்ச்சியான மேம்பாடு ஆகியவையாகும். இதன் மூலம் தவறுகளை பின்னர் சரி செய்வதைவிட, முன்கூட்டியே தடுக்கும் தரக் கட்டுப்பாடு உருவாகிறது.





## செயல்முறை அணுகுமுறை மற்றும் PDCA சுழற்சி

QMS இன் வலிமையான கூறாக செயல்முறை அணுகுமுறை (Process Approach) விளங்குகிறது. அனைத்து செயல்பாடுகளும் ஒன்றோடொன்று தொடர்புடைய செயல்முறைகளாக நிர்வகிக்கப்படுகின்றன.

## PDCA (Plan–Do–Check–Act) சுழற்சி மூலம் :

திட்டமிடல் மற்றும் செயல்படுத்தல் ஒழுங்குபடுத்தப்படுகிறது
செயல்திறன் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது
திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன




இதன் மூலம் செயல்முறை மாறுபாடுகள் குறைந்து, திறன் மற்றும் தரம் மேம்படுகிறது.

## MSME களுக்கு QMS வழங்கும் முக்கிய நன்மைகள்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (MSME)களுக்கு QMS பல்வேறு நடைமுறை நன்மைகளை வழங்குகிறது. நிலையான நடைமுறைகள் மூலம் மீள்செயல்பாடு, வீணாக்கம் மற்றும் செலவுகள் குறைக்கப்படுகின்றன. ஒரே மாதிரியான தரம் மற்றும் நேர்த்தியான விநியோகம் வாடிக்கையாளர் திருப்தியை உயர்த்துகிறது.

ஆவணப்படுத்தப்பட்ட நடைமுறைகள் பணியாளர்களின் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களை தெளிவுபடுத்தி, துறைகள் இடையே ஒத்துழைப்பை மேம்படுத்துகின்றன.

## சந்தை நம்பகத்தன்மை மற்றும் வளர்ச்சி

QMS சான்றிதழ் நிறுவனத்தின் நம்பகத்தன்மையை உயர்த்தி, பெரிய வாடிக்கையாளர்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கான வாய்ப்புகளை உருவாக்குகிறது. இது தொழில்களின் போட்டித் திறனை அதிகரித்து, நிலையான வளர்ச்சிக்கு அடித்தளமாகிறது.




## முடிவுரை

தரம் என்பது ஒரு இலக்கு அல்ல; அது தொடர்ச்சியான பயணம். தர மேலாண்மை அமைப்பு தொழில்களின் செயல்திறன், வாடிக்கையாளர் நம்பிக்கை மற்றும் நீண்டகால வெற்றியை உறுதி செய்யும் ஒரு முக்கிய மேலாண்மை கருவியாகும். குறிப்பாக MSME களின் வளர்ச்சிக்காக QMS ஒரு அவசியமான முதலீடாகும்.

*முந்தய இதழின் தொடர்ச்சி.....*

# வணிகங்களுக்கான 50 செயல் குறிப்புகள்




திரு. **S. சக்திவேல்,**
பொறுப்பாசிரியர்
ஈடிசியா.
(Prasanab Syndicate)


## *TEAM, PEOPLE & OPERATIONS AURA CLEANING*

***(குழு, மக்கள் மற்றும் செயல்பாடுகள்)***

- ஒரு குழு உறுப்பினரைச் சரி செய்வதற்குமுன், எரிச்சலைச் சுத்திகரியுங்கள்.
- குழுவின் செயல்திறன் இடைவெளிகளுக்கு பொறுப்பேற்கவும்.
- ஊழியர்கள் மீது வைக்கப்பட்டுள்ள நனவில்லாத எதிர்பார்ப்புகளைச் சுத்திகரியுங்கள்.
- கூட்டங்களுக்கு முன், அறையை மனரீதியாகச் சுத்திகரியுங்கள்.
- மோதலைத் தீவிரப்படுத்துவதற்குப் பதிலாக, தகவல் தொடர்பு முறிவுகளைச் சுத்திகரியுங்கள்.



- முக்கியமான வேலையை ஒப்படைப்பதற்கான பயத்தைச் சுத்திகரியுங்கள்.
- நுண்திறன் மேலாண்மையை (Micromanaging) நிறுத்திவிட்டு – உங்கள் நம்பிக்கைப் பிரச்சினைகளைச் சுத்திகரியுங்கள்.
- குழு உங்கள் கருத்துக்களைச் சவால் செய்யும்போது ஏற்படும் தலைமைப் பாதுகாப்பின்மையைச் சுத்திகரியுங்கள்.
- வாடிக்கையாளர் புகார்களிலிருந்து வரும் கோபத்தைச் சுத்திகரியுங்கள்.
- தணிக்கைகள் (Audits), தவறுகள் மற்றும் இணக்கமற்ற அறிக்கைகளை (NCRs) சுத்திகரிக்கும் தூண்டுதலாகக் கருதுங்கள் (மிகவும் லீன்– QMS இணக்கமானது).

**D. FAST DECISION MAKING & GROWTH AURA CLEANING** (முடிவெடுத்தல் மற்றும் வளர்ச்சி)




- அதிகமாகப் பகுப்பாய்வு செய்வதற்குப் பதிலாக, பெரிய முடிவுகளுக்கு முன்சுத்திகரியுங்கள்.
- அழுத்தத்தால் அல்லாமல், ஈர்க்கப்பட்ட செயலின் அடிப்படையில் மட்டுமே செயல்படுங்கள்.
- வளர்ச்சிக்காகக் காத்திருக்கும்போது ஏற்படும் பொறுமையின்மையைத் சுத்திகரியுங்கள்.
- கூட்டாண்மைக்கு முன், நிச்சயமற்ற தன்மையைச் சுத்திகரியுங்கள்.
- ஒவ்வொரு விளைவையும் கட்டுப்படுத்த வேண்டிய தேவையை விடுங்கள்.

- தானியங்கு மயமாக்கல் மற்றும் அமைப்புகள் மீதான பயத்தைச் சுத்திகரியுங்கள்.
- தொழில்நுட்பம் அல்லது டிஜிட்டல் கருவிகள் மீதான எதிர்ப்பைச் சுத்திகரியுங்கள்.
- புதிய கண்டுபிடிப்புகளைத் தடுக்கும் கடந்த கால – வெற்றிகரமான சூத்திரங்களை விடுங்கள்.
- மேலும் கடினமாகத் தள்ளுவதற்குப் பதிலாக, சோர்வைச் சுத்திகரியுங்கள்.
- வணிக வளர்ச்சியை உள்அமைதியுடன் சீரமைக்கவும்.

**E. DAILY PRACTICE & LONG TERM SUCCESS** (தினசரி பயிற்சி மற்றும் நீண்டகால வெற்றி)

- மனஅழுத்தம் எழும்போது எல்லாம் Ho’oponopono (ஹ°’ஓபொனோபொனோ)வைப் பயன்படுத்துங்கள்.
- உள்ளுணர்வை மீட்டமைக்க தூங்குவதற்கு முன்சுத்திகரியுங்கள்.
- வாரத்திற்கு ஒருமுறை வாடிக்கையாளர் தரவுத் தளத்தை ஆற்றல் ரீதியாகச் சுத்திகரியுங்கள்.
- உங்கள் அலுவலக இடத்தை மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் சுத்திகரியுங்கள்.
- பல பணிகளைச் செய்வதை நிறுத்திவிட்டு – கவனச்சிதறலைச் சுத்திகரியுங்கள்.
- பொதுப் பேச்சு அல்லது பயிற்சிக்குமுன், தன்னம்பிக்கை சந்தேகத்தைச் சுத்திகரியுங்கள்.
- முன்னேற்றத் திட்டங்களுக்கு உள்அறிவை வழிகாட்டவிடுங்கள்.
- தீயை அணைக்கும் வேலையை உள்தெளிவுடன் மாற்றுங்கள்.
- பிரச்சினைகளுக்காக நன்றி சொல்லுங்கள் – அவை எதைச் சுத்திகரிக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகின்றன.
- நீங்கள் சுத்தமாக இருக்கும்போது, சரியான வாடிக்கையாளர்கள், சரியான அமைப்புகள், சரியான பணப்புழக்கம் ஆகியவை வரும் என்று நம்புங்கள்.




**HO’OPONOPONO AURA CLEANING PRAYER**

சிறுவணிக வளர்ச்சிக்கான ஹ°’ஓபொனோபொனோ பிரார்த்தனை சிறிய தினசரி வணிகப் பிரார்த்தனை (2 நிமிடங்கள்)

- என்னை மன்னிக்கவும். (I’m sorry) : உங்கள் தவறுகள் அல்லது நினைவுகளில் உள்ள பிரச்சனைகளுக்காக மன்னிப்பு கேட்பது.
- தயவுசெய்து என்னை மன்னித்துவிடுங்கள். (Please Forgive Me.) : என்னை மன்னிக்கவும் என்று கேட்பது.
- நன்றி. (Thank you.) : இந்த அனுபவத்திற்காக நன்றி கூறுவது.
- நான் உன்னை நேசிக்கிறேன். (I love you.) : உங்கள் உள் தெய்வீகத்துடன் அன்பை மீண்டும் இணைப்பது.